29th October 1962]

இந்தக் கல்லூரியினுடைய திட்டத்தைப் பற்றி மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் ஒன்றும் அனுப்பவில்லை என்று மத்திய அமைச்சர் அவர்கள் சொன்னது, அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கல்லூரி மூன்றுவது திட்டத்தில் சேர்க்கப்பட்டது என்று சொன்னேனே தவிர, இந்த வருஷமே ஆரம்பிப்பதாகச் சொன்னதாக எனக்குத் தெரியாது. மூன்றுவது திட்ட காலத்திற்குள் இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்படும். இது சாதாரணமான கல்லூரி அல்ல. சற்று விரிவாக ஆரம்பிக்கின்ற கல்லூரி. இதற்கு 400 ஏக்கர் நிலம் வேண்டும். முதலில் நிலம் ஆர்ஜிதம் செய்து, அதற்குப் பிறகு கட்டிடங்கள் கட்டி, வசதிகள் வைத்த பிறகுதான் அந்தக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும்.

Documentary films

* 858 Q.—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Information be pleased to state—

(*a*) whether any documentary film depicting the birthday celebrations of Sri K. Kamaraj, the Chief Minister, was exhibited just before the General Elections; and

(*b*) if so, in which places?

The Hon. Sri G. BHUVARAHAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. எஸ். மாதவன் : இந்தத் தேர்தல் காலத்திலே, அப்படிப் பட்ட படம் காண்பிக்கப்பட்டதாக மத்திய சர்க்காருக்குப் புகார் செய்யப்பட்டு, மத்திய சர்க்கார் நம்முடைய சர்க்காருடைய கவனத்திற்கு அதுபற்றி அறிவித்தது உண்டா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : இந்தமாதிரி விஷயம் ஒன்றும் வந்ததாகத் தெரியவில்லை.

கனரக கொதி கலன் தொழிற்சாலை

4-30 p.m.

* 859 **கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பாய்லர் தொழிற்சாலை திருவரம்பூர் ரயில் நிலையத்திற்குத் தெற்கில் அமைக்கப்படுமா அல்லது வேறு இடத்தில் அமைக்கப்படுமா ?

(இ) வேறு இடத்தில் அமைப்பதானல் காரணமென்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : (அ) The High Pressure Boiler Plant factory wil be located south of the railway line near Tiruvarumbur.

(இ) Does not arise.